
**நவம்பர் – 24**

# TNPSC துளிகள்

- சென்னை அருகே ஆவடியில் உள்ள பட்டாபிராம் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள 21 அடுக்குகள் கொண்ட டைடல் தொழிற்துறைப் பூங்காவினை தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- பெரும் புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளர் K.C.பன்சால் வளர்ந்து வரும் நாடுகளில் அறிவியல் முன்னேற்றத்திற்காக உலக அறிவியல் அகாடமியின் (TWAS) புத்தாய்வு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தேசியத் தூய்மை கங்கை இயக்கத்தின் (NMCG) 57வது செயற்குழு (EC) அமர்வில், 1,062 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- ஐக்கியப் பேரரசில் நடைபெற்ற 38வது லீட்ஸ் சர்வதேச திரைப்பட விருது விழாவில் மனோஜ் பாஜ்பாயின் 'The Fable' சிறந்த திரைப்படத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கியானது, தனது புகழ்பெற்ற மும்பையில் உள்ள ஹார்னிமன் வட்டக் கிளையின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில் அச்சிடப்பட்ட 100 ரூபாய் மதிப்பிலான சிறப்பு நினைவு நாணயத்தினை வெளியிட்டுள்ளது.
- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது, "Devolution to Development - மேம்பாட்டிற்கான அதிகாரப் பகிர்வு" என்ற தலைப்பில் முதல் வகையிலான ஒரு நாள் அளவிலான நிதி ஆணையங்களின் மாநாட்டினைப் புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- சத்தீஸ்கரின் பஸ்தார் மாவட்டத்தில் உள்ள துத்மராஸ் எனப்படுகின்ற ஒரு சிறிய கிராமமானது, ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பினால் (UNWTO) அதன் சிறந்த சுற்றுலா கிராம மேம்பாட்டுத் திட்டத்திற்காகத் தேர்வு செய்துள்ளது.
- ரியோ நகரில் நடைபெற்ற வருடாந்திர G20 நாடுகளின் உச்சி மாநாட்டின் நிறைவு விழாவின் போது, பிரேசில் நாடானது G20 அமைப்பின் தலைமைப் பொறுப்பினை தென்னாப்பிரிக்காவிற்கு அதிகாரப் பூர்வமாக ஒப்படைத்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## 12 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த சோழர் காலத் தூண்





- 12 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த சோழர் காலத்து கல் தூண் ஒன்று, கடலூரில் உள்ள பழூரில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

- கி.பி.1125 ஆம் ஆண்டில் செதுக்கப்பட்ட இந்தத் தூண் ஆனது, கிராம மக்கள் அங்குள்ள சிவன் கோயிலுக்கு நிலங்களை வழங்கியதைக் குறிக்கிறது.
- இது விக்கிரம சோழனின் ஆட்சியின் 5வது ஆண்டுடன் தொடர்புடையது.
- இந்தத் தூணில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டின்படி, கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் பதினாலு அடிக்கோல் எனப்படுகின்ற சோழர் அளவீட்டு முறையை நன்கு பயன்படுத்தி அளவிடப்பட்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## ANRF அறக்கட்டளையின் PAIR திட்டம்





- மத்திய அரசின் தலைமையிலான அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை (ANRF) ஆனது துரிதப்படுத்தப்பட்டப் புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கானக் கூட்டாண்மை திட்டத்தினை (PAIR) தொடங்கியுள்ளது.
- PAIR திட்டம் ஆனது, இந்தியப் பல்கலைக்கழகங்களில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது வழிகாட்டுதல்கள் மூலமான மையம் மற்றும் கிளை (ஆரக் கிளை) மாதிரி மூலம், உயர்மட்ட நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை மேம்படுத்தச் செய்வதன் மூலம் மத்திய மற்றும் மாநில பொதுப் பல்கலைக்கழகங்களில் தரமான ஆராய்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தும்.

## பினாகா ஆயுத அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆனது, வழிகாட்டுதலுடன் கூடிய பினாகா பல் குழல் உந்துகணை ஏவுதல் (MBRL) அமைப்பின் ஏவுதல் சோதனைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- இது பினாகா அமைப்பின் தாக்குதல் வரம்பினை சுமார் 75 கிலோ மீட்டருக்கும் மேல் உயர்த்துகிறது.
- தற்போது, இந்த அமைப்பில் இரண்டு வகைகள் உள்ளன.

- அவற்றுள் முதலாவது 40 கிலோமீட்டர் தூர வரம்புடைய மார்க் I, இரண்டாவது 75 கிலோ மீட்டர் தூர வரம்புடைய மார்க் II ஆகும்.
- மேலும் இதன் தாக்குதல் வரம்பினை சுமார் 120 கிலோ மீட்டர் தூர வரம்பு வரையிலும், பின்னர் 300 கிலோ மீட்டர் வரையிலும் மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இது ஒவ்வொரு 4 வினாடிக்கும் ஒரு உந்துகணை என்ற சரியான வீதத்தில், வெறும் 44 வினாடிகளில் அனைத்து 12 உந்துகணைகளையும் சால்வோ என்ற முறையில் (ஒரே நேரத்தில் பல ஏவுகணைகளை ஏவுதல்) ஏவக் கூடிய திறன் கொண்டது.
- பினாகா உந்துகணை ஏவுதல் அமைப்பானது, அமெரிக்க நாட்டின் ஹிமர் ஆயுத அமைப்பிற்கு இணையானதாகக் கருதப்படுகிறது.
- இதனை வாங்குவதற்கான முதல் ஆணையினை ஆர்மேனியா பதிவு செய்தது.
- தற்போது பிரான்சு அரசும், இந்த அமைப்பினை வாங்குவதற்கு ஆர்வம் காட்டியுள்ளது.




*Components of Pinaka Battery*


## 'e-Tarang' அமைப்பு



- ஆயுதப்படைகள் ஆனது செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் 'e-Tarang' என்ற அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.


- இது பாதுகாப்புத் துறையில் தானியங்கி திட்டமிடல் மற்றும் மேலாண்மைக்கான ஒரு புதுமையான தீர்வாகும்.
- e-Tarang ஆனது போர்க்காலம் மற்றும் அமைதிக்காலம் ஆகிய இரு காலங்களிலும் பாதுகாப்புத் துறையில் இடையீடு இல்லாத செயல்பாட்டினைச் சீரமைக்கும்.

## 4வது கட்ட கட்டாயத் தரக் குறியீடிடல்




- இந்தியத் தர நிர்ணய வாரியம் ஆனது, நவம்பர் 05 ஆம் தேதி முதல் தங்க நகைகள் மற்றும் தங்க வேலைப்பாடுகள் உள்ள கலைப்பொருட்களுக்கான நான்காவது கட்ட கட்டாயத் தரக் குறியீடிடல் நடவடிக்கையினைத் துவக்கியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதியன்று, கட்டாய ஹால்மார்க்கிங் அறிமுகப் படுத்தப் பட்டதில் இருந்து, 40 கோடிக்கும் அதிகமான தங்க நகைகளுக்குத் தனிப்பட்ட அடையாளத்துடன் தரக் குறியீடு வழங்கப்பட்டுள்ளன.
- இது நுகர்வோர் மத்தியில், சந்தை மீதான அதிக நம்பிக்கை மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

## ஆயுஷ்மான் பாரத் வாய வந்தனா அட்டைகள்





- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுஷ்மான் வாய வந்தனா அட்டைகளுக்கு 70 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 10 லட்சத்திற்கும் மிக அதிகமான முதியோர்கள் பதிவு

செய்துள்ளனர்.

- ❖ இது ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB PM-JAY) திட்டத்தின் கீழ் இலவச மருத்துவச் சிகிச்சைகளைப் பெற அவர்களுக்கு உதவுகிறது.
- ❖ 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட இந்த அட்டைகள் மூன்று வாரங்களுக்குள் இந்த சாதனை அளவான பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ ஆயுஷ்மான் வாய வந்தனா அட்டை திட்டத்தின் கீழ் பதிவு செய்தவர்களில் சுமார் 4 லட்சம் பேர் பெண்கள் ஆவர்.

## ‘PPP plus PPP’ மாதிரி




- ❖ இந்தியாவில் நீரிழிவு நோய்க்கான தீர்வுகளை உருவாக்குவதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச கூட்டாண்மைகளை ஒன்றிணைப்பதற்காக ‘PPP plus PPP’ மாதிரியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது “உள்நாட்டில் பொது-தனியார் கூட்டாண்மை மற்றும் சர்வதேச அளவிலான பொது -தனியார் கூட்டாண்மையுடன் ஒத்துழைப்பினை மேற்கொள்ளுதல் என வரையறுக்கப் படுகிறது.
- ❖ இத்தகைய பரந்த அளவிலான சுகாதாரப் பாதுகாப்பு சவால்களைச் சமாளிப்பதற்கும், உள்நாட்டு மக்களின் நலனுக்காக ஓர் உலகளாவிய நிபுணத்துவத்தைப் பயன்படுத்தச் செய்வதற்கும் இந்தக் கூட்டாண்மை கட்டமைப்பு முக்கியமானதாகும்.

# சர்வதேசச் செய்திகள்


## காபோன் நாட்டின் புதிய அரசியலமைப்பு

- ❖ நாட்டின் இராணுவ ஆட்சியாளர்களால் முன்மொழியப் பட்ட ஒரு புதிய அரசியல் அமைப்பிற்கு காபோன் நாட்டு மக்கள் 91.8 சதவீத வாக்களித்து அங்கீகரித்துள்ளனர்.
- ❖ முன்மொழியப் பட்டுள்ள இந்தப் புதிய அரசியலமைப்பு ஆனது அதிபர் பதவிக்கு இரண்டு முறை ஆட்சிக் கால வரம்பினை அறிமுகப்படுத்துகிறது.

- இது அந்தப் பதவிக் காலத்தினை ஐந்து ஆண்டுகளில் இருந்து ஏழு ஆண்டுகளாக அதிகரிக்கிறது.
- மத்திய ஆப்பிரிக்க நாட்டின் இந்தப் புதியதொரு அரசியலமைப்பு ஆனது பிரதமர் பதவியையும் நீக்குகிறது.
- அதிபரைத் தொடர்ந்து அவரது குடும்ப உறுப்பினர்கள் அந்தப் பதவிக்கு வர முடியாது என்பதையும் இது குறிப்பிடுகிறது.
- முன்னாள் அதிபர் அலி போங்கோ ஒண்டிம்பாவை பதவி நீக்கம் செய்து 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இராணுவ அதிகாரிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.




## இராணுவ உத்திசார் எறிகணை அமைப்புகள்





- உக்ரைன் நாடானது, அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர வரம்புடைய எறிகணைகளை ரஷ்ய எல்லைக்குள் நிர்ணயிக்கப்பட்ட தனது இலக்கு நோக்கி ஏவியது.
- இராணுவ உத்திசார் எறிகணை அமைப்பு (ATACMS) என்பது 300 கிலோ மீட்டர் (186 மைல்கள்) வரையிலான தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்ட ஒரு நிலம் விட்டு நிலம் பாயும் உந்துவிசை ஏவுகணையாகும்.
- அவை முதன்முதலில் 1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போரில் பயன்படுத்தப்பட்டன.

- இவை வளிமண்டலத்தில் ஒரு உந்துவிசை பாதையைப் பின்பற்றி, மிக அதிக வேகம் மற்றும் அதிக கோணத்தில் கீழிறங்கும் என்பதால், அவற்றை இடைமறிப்பது கடினம் ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பவளப் பாறை இனங்களின் அழிவு

- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) சமீபத்திய ஒரு உலகளாவிய மதிப்பீடு ஆனது இது தொடர்பான ஒரு புள்ளி விவரத்தை வெளிப்படுத்தி உள்ளது.
- 44 சதவீதப் பவளப்பாறைகளை உருவாக்கும் பவள இனங்கள் தற்போது அழியும் ஒரு அபாயத்தில் உள்ளன.
- 2008 ஆம் ஆண்டில் IUCN அமைப்பானது கடைசியாக இது குறித்த மதிப்பீட்டினை மேற் கொண்டபோது இருந்த 33 சதவீதத்திலிருந்து இந்த எண்ணிக்கையானது தற்போது அதிகரித்துள்ளது.
- சமீபத்தியக் கண்டுபிடிப்புகள் ஆனது, 892 வகையான மிதவெப்ப நீரில் காணப்படும் பவளப்பாறைகளில் 44 சதவீதம் ஆனது பல அச்சுறுத்தல்களின் காரணமாக ஆபத்தை எதிர்கொள்கின்றன.
- இந்த இனங்களில், 56 இனங்கள் எளிதில் பாதிக்கப்படக் கூடியவை (15 சதவீதம்), 251 அருகி வரும் இனம் (67 சதவீதம்) மற்றும் 33 மிக அருகி வரும் இனம் (9 சதவீதம்) என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- பவளப் பாறைகள் சுற்றுலா மற்றும் அதனுடன் தொடர்புடையத் தொழில்துறைகள் மூலம் ஆண்டிற்கு 375 பில்லியன் டாலர் வருமானத்தினை வழங்குகின்றன.





## ஆப்பிரிக்கப் பென்குயின் – அருகி வரும் இனம்

- ஆப்பிரிக்கப் பென்குயின் ஆனது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிக அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்ட உலகின் முதல் பென்குயின் இனம் ஆகும்.
- ஆப்பிரிக்கப் பெங்குவின் (ஸ்பெனிஸ்கஸ் டெமர்சஸ்) ஆனது நமீபியா மற்றும் தென் ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப்படுகின்றன.
- அவற்றின் எண்ணிக்கையில் 97% ஏற்கனவே அழிந்து விட்டன.
- தற்போது சுமார் 20,000க்கும் குறைவான பெங்குயின்களே அவற்றின் வாழ்விடங்களில் உள்ளன.

- இது 2035 ஆம் ஆண்டில் அவற்றின் வாழ்விடங்களில் அழிந்து விடும்.




## மிதவெப்ப மழைக்காடுகளுக்கான அச்சுறுத்தல்கள்




- தற்போதைய சூழலே மாறாமல் தொடரும் நிலையில் 68 சதவீதத்திற்கும் அதிகமான மித வெப்ப மழைக்காடுகள் பருவநிலை மாற்றத்தினால் இழக்கப்படும்.
- பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதற்காக மிக ஒருங்கிணைந்த முயற்சிகள் எதுவும் எடுக்கப் படாவிட்டால், 'தற்போதையச் சூழலே மாறாமல் தொடரும் நிலை' ஏற்படுவதற்கு ஒரு சாத்தியமான வாய்ப்பு உள்ளது.
- இந்த சூழ்நிலையில் இத்தகையக் காடுகளில் மூன்றில் இரண்டு பங்கு ஆனது 2100 ஆம் ஆண்டில் அழிந்து விடும்.
- மிதவெப்ப மழைக்காடுகள் ஈரமான மற்றும் குளிர்ந்தப் பகுதிகளில் மட்டுமே காணப் படும் அரிய சுற்றுச்சூழல் அமைப்புகளாகும்.
- அவை புவியின் நிலப்பரப்பில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான பரப்பளவில் பரவி,


உலகின் 2.5 சதவீத காடுகளைக் கொண்டுள்ளது.

- கனடா, அமெரிக்கா, சிலி, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை மிகப்பெரிய மித வெப்ப மழைக் காடுகள் பருவநிலை உயிரினக் குழுவினைக் கொண்ட நாடுகள் ஆகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்திரா காந்தி அமைதி பரிசு 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசு ஆனது, மிகப்புகழ் வாய்ந்த செவ்வியல் பியானோ கலைஞரும் இசை நிகழ்ச்சி நெறியாளருமான டேனியல் பாரன்போம் மற்றும் பாலஸ்தீனிய அமைதி ஆர்வலர் அலி அபு அவ்வாத் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இசை மற்றும் கலாச்சார பேச்சுவார்த்தை முன்னெடுப்புகள் மூலம் இந்த அமைதியை மேம்படுத்துவதில் பங்காற்றியதற்காக பாரன்போம்க்கு இந்தப் பரிசு வழங்கப் பட்டது.
- அவ்வாத் இஸ்ரேல் நாட்டு சிறையில் சிறிது காலம் கழித்த பிறகு அவர் தொடங்கிய ரூட்ஸ் என்ற ஒரு அமைப்பின் மூலமான பேச்சுவார்த்தைக்கான அவரது ஆதரவிற்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டது.




# முக்கிய தினங்கள்


## சர்வதேச சகிப்புத் தன்மை தினம் - நவம்பர் 16

- 1995 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று, யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் சகிப்புத் தன்மை பற்றிய கொள்கைகளின் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 1996 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை அறிவித்தது.

- சகிப்புத் தன்மை என்பது ஒரு தனியுரிமை வழங்கலோ அல்லது புறக்கணிப்போ அல்ல என்பதை இந்தப் பிரகடனம் உறுதிப்படுத்துகிறது.
- இது நமது உலகின் பல்வேறு கலாச்சாரங்கள், நமது உணர்வு வெளிப்பாட்டின் சில வடிவங்கள் மற்றும் மனிதனாக இருப்பதன் நிலைகளை மதிப்பது மற்றும் அதனை பாராட்டுவது என்பதாகும்.




## சர்வதேச மாணவர்கள் தினம் - நவம்பர் 17




- இரண்டாம் உலகப் போரின் போது தங்கள் உரிமைகளுக்காக போராடிய ஆயிரக் கணக்கான மாணவ ஆர்வலர்களின் துணிச்சலின் நினைவாக இந்த நாள் நினைவு கூரப் படுகிறது.
- நாஜிக்களின் தாக்குதலின் போது, ப்ரேக் நகரில் உயர்கல்வி பெறும் ஒரு உரிமைக்காக மாணவர்கள் போராடினர்.
- 1939 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதியன்று செக் குடியரசை நாஜி ராணுவப் படைகள் ஆக்கிரமித்து, ஒன்பது போராட்டக்காரர்களை விசாரணையின்றித் தூக்கிலிட்டனர்.

## உலக கழிவறை தினம் - நவம்பர் 19

- இந்த நாள் உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், ஓர் அவசர சுகாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்தல் எனப்படும் 6வது நிலையான மேம்பாட்டு இலக்கின் ஒரு பகுதியாக மிகப்

பாதுகாப்பான மற்றும் அணுகக் கூடிய கழிவறை வசதிகளின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Toilets - A Place for Peace' என்பதாகும்.




## உலக குழந்தைகள் தினம் - நவம்பர் 20

- இது சர்வதேச ஒற்றுமை, உலகளவில் குழந்தைகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தச் செய்தல் மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1959 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் தேதியன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- மேலு இது 1989 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்ட தேதியும் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Listen to the Future" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★